

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் திருவள்ளுவர் ஆண்டு 2050 ஜூலை 04, 2019 புரட்சி 18 முழக்கம் 25 விலை: ரூ.3.00


## கூட்டாட்சி – ஒற்றை ஆட்சியாகும்; அதிபரே நாட்டை ஆள்வார்

# ‘ஒரே நாடு; ஒரே தேர்தல்’ உருவாக்கும் ஆபத்து

***‘ஒரே தேசம்; ஒரே தேர்தல்’ நடைமுறைக்கு வந்தால் கூட்டாட்சி தத்துவத்தையே தகர்த்து விடும் என்று பிரபல அரசியல் விமர்சகர் – எழுத்தாளர் ஏ.ஜி. நூரானி எச்சரித்திருக்கிறார். ‘டெக்கான் குரோனிக்கல்’ ஏடு (ஜூன் 30, 2019) அவரது கட்டுரையை வெளியிட்டிருக்கிறது. கட்டுரையில் அவர் பதிவு செய்துள்ள கருத்துகள்:***

பிரதமர் எந்த நேரத்தில் தேர்தல் நடத்த வேண்டும் என்று முடிவெடுக்கிறாரோ, அப்போதே குடியரசுத் தலைவரிடம் நாடாளுமன்றத்தைக் கலைக்கச் சொன்னால், நாடு முழுதும் தேர்தல் நடத்தும் நிலை வந்துவிடும். மாநில முதல்வர்களுக்குள்ள அதிகாரங்கள் ஆளுநருக்குப் போய் விடும். குடியரசுத் தலைவர் - நாடாளுமன்றத்தைக் கலைக்கும்போது, மாநில ஆளுநர்களும் சட்டமன்றங்களைக் கலைத்து விடுவார்கள். 1948ஆம் ஆண்டு அரசியல் நிர்ணய சபையிலேயே டாக்டர் அம்பேத்கர் இந்தக் கருத்தை சுட்டிக்காட்டியிருக்கிறார். 1948ஆம் ஆண்டு இது குறித்து மேலும் தெளிவான விளக்கங்களை முன் வைத்தார்.

“நமது அரசியல் சட்டத்தின் பிற மாநில அரசுகள், சட்டமியற்றுவதற்கோ, நிர்வாகத்துக்கோ, நடுவண் ஆட்சியை எந்த வகையிலும் சார்ந்திருக்கத் தேவையில்லை. இந்தப் பிரச்சினையில் நடுவண் அரசும் மாநில அரசுகளும் சமமான அதிகாரங்களைப் பெற்றுள்ளன. (The states under our constitution are in no way dependent on the centre for their legilative or executive authority. The centre and the states are co-equal in this matter)

நாடாளுமன்ற ஜனநாயகத்தில் இந்த உரிமைகள் மிகவும் முக்கியமானது; அதன் முக்கியத்துவத்தை உணரவே மறுக்கிறார்கள். பிரதமர் மோடி நினைத்தால் நாடு முழுதும் எந்த நேரத்திலும் தேர்தலை அறிவிக்கலாம். நாடாளுமன்றம் கலைக்கப்படும்போது இதன் இணைப்புகளாக மாற்றப்படும்; மாநில சட்டமன்றங்களும் கலைக்கப்படும். ஒரு தனி மனிதரின் விருப்பத்துக்கு நாடாளுமன்ற ஜனநாயகம் பணிந்து போக வேண்டும். கூட்டாட்சி முறை ஒற்றை ஆட்சியாகவும் நாடாளுமன்ற ஜனநாயக முறை அதிபர் ஆட்சி முறையாகவும் இதன் வழியாக மாற்றப் படுகிறது. கூட்டாட்சி அமைப்பின் வலிமையே அதில் அடங்கியுள்ள மாநிலங்களின் பன்முகத் தன்மையை அங்கீகரிப்பதுதான். மாநில சட்டமன்றத் தேர்தல்களில் மாநில மக்களின் பிரச்சினைகள் அழுத்தம் பெறுகின்றன. ஒரே தேர்தல் முறை மாநிலங்களின் பிரச்சினைகளையே காணாமல் போகச் செய்துவிடும்.

1971இல் பிரதமர் இந்திரா காந்தி மன்னர்களுக்கு தரும் மானயங்களை ஒழிக்கும் சட்டம் கொண்டு வந்தார். உச்சநீதிமன்றம் அதை செல்லாது என்று கூறியது. உடனே உச்சநீதிமன்றத்துக்கு பாடம் புகட்டுவதற்காக நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தல் நடத்தி மீண்டும் ஆட்சிக்கு வந்தார். 1972இல் பாகிஸ்தானிலிருந்து வங்கதேசத்தைப் பிரித்து தனி நாடாக்க படைகள் அனுப்பினார். அந்த நோக்கத்தில் வெற்றி பெற்றவுடன், மாநில சட்டமன்றங்களைக் கலைத்து தேர்தல் நடத்த உத்தர விட்டார். காங்கிரஸ் பெரும் வெற்றி பெற்றது. மாநில முதல்வர்கள் டெல்லியில் முடிவு செய்யப்பட்டு, மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டனர். ஒரே நேரத்தில் நாடாளுமன்றம் சட்டமன்றங்களுக்கு தேர்தல் நடத்தும் முறை இதுபோன்ற ‘அதிகாரத்தைக் கைப்பற்றும்’ அரசியல் சாணக்கியத்தனத்துக்கே வழி வகுக்கும்.

பிரதமர் மோடி இது குறித்து ஆலோசிக்க ஜூன் 19ஆம் தேதி கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் காங்கிரஸ் உள்பட 11 கட்சிகள் பங்கேற்கவில்லை. 21 கட்சிகள் மட்டும் பங்கேற்றன. பங்கேற்ற கட்சிகளும் வெளிப்படையாக ஆதரவு தெரிவிக்கவும் இல்லை. தேசிய அளவில் இதற்கு ஆதரவாக ஒருமித்த கருத்து இல்லை என்பதையே இவை வெளிப்படுத்துகின்றன என்ற கருத்துகளை பதிவு செய்திருக்கிறது, ஏ.ஜி.நூரானியின் கட்டுரை.

### கருநாடகத்தில் பார்ப்பனத் திமிர்

கருநாடக மாநிலத்தில் உள்ள உடுப்பி கிருஷ்ணா மடத்துக்கு மணிப்பாலைச் சார்ந்த வனிதா ஷெட்டி என்ற பெண் உதவிப் பேராசிரியர் கடந்த ஏப்.15ஆம் தேதி சென்றிருக்கிறார். அப்போது மடத்தில் இலவச உணவு பரிமாறப்பட்டது. பந்தியில் அமரச் சென்ற பேராசிரியரை சிலர் தடுத்து நிறுத்தி மேல் தளத்துக்குப் போய்ச் சாப்பிட கட்டளையிட்டுள்ளனர். கீழ்தளத்தில் நடக்கும் பந்தியில் ‘பிராமணர்கள்’ மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள் என்று கூறியவுடன், வனிதா ஷெட்டி அவமானப்பட்டு சாப்பிடாமலேயே வெளியேறி விட்டார். இதைத் தொடர்ந்து சமூக ஆர்வலர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். உடுப்பி மடத்தின்மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியுள்ளனர். ‘பிராமணர்-பிராமணரல்லாதார்’ என்ற பாகு பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும். இதற்கான நேரம் நெருங்கி விட்டது என்று “கருநாடக சோமு சவுதார்தா வேதிகா சங்கம்” என்ற அமைப்பு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. உண்மைகள் அம்பலமான நிலையில் உடுப்பி கிருஷ்ணா கோயில் மடாதிபதி ‘வல்லப தீர்த்த சாமிஜி’ என்ற பார்ப்பனர், ஏனைய ஏழு மடாதிபதிகளுடன் கலந்து பேசி இப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்று இறங்கி வந்திருக்கிறார்.

### கடவுளுக்கு சக்தி இல்லை என்பது அர்ச்சகர்களுக்கு புரியும்

கர்ப்பகிரகத்துக்குள் ஒவ்வொரு நாளும் ‘கடவுள்கள்’ அருகே நின்று வேத மந்திரம் ஓதி பூஜை சடங்குகளை செய்யும் ‘அர்ச்சகர்’களுக்கு கடவுளுக்கு எந்த சக்தியும் இல்லை என்பது நன்றாகவே தெரியும். சான்றாக அண்மையில் ஒரு செய்தி வந்திருக்கிறது. காஞ்சிபுரம் ‘ஏகாம்பரேசுவர்’ கோயிலில் சோமாஸ்கந்தன் மற்றும் ஏலவார்குழலி சாமி சிலைகள் சேதமடைந்துவிட்டதாகக் கூறி, புதிய அய்ம்பொன் சிலைகள் செய்வதற்காக பக்தர்களிடமிருந்து 8.7 கிலோ தங்கம் (ரூ.2.82 கோடி மதிப்பு) நன் கொடையாகப் பெறப்பட்டது. ஆனால், தங்கத்தைப் புதிய சிலைகளுக்குப் பயன்படுத்தாமல் மோசடி செய்யப்பட்டது கண்டறியப் பட்டது. இதற்கு மூளையாக செயல்பட்டவர் ‘பிராமண’ புரோகிதரான ராஜப்பா குருக்கள் (வயது 84). இந்தக் கோயிலில் எந்த மாற்றங்கள் செய்ய வேண்டுமானாலும், இந்த பார்ப்பன புரோகிதர் மட்டுமே ஆலோசனை கூறுவார். கோயிலை தனது முழுக் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். புதிய சிலைகள் செய்ய வேண்டும் என்று ஆலோசனை கூறியவரும் இவர்தான். சில அறநிலையத் துறை அதிகாரிகள் உடந்தையாக இருந்ததாகக் கைது செய்யப் பட்டனர். ஆனால் ‘பிராமணர்’ ராஜப்பா மட்டும் கனடாவுக்கு தப்பி ஓடி விட்டார். ‘பிராமணர்’ கடல் தாண்டக் கூடாது என்பது சாஸ்திரம். தேவைப்பட்டால் ‘அவாள்’ மீறிக் கொள்வார்கள். தலைமறைவாகி விட்ட அர்ச்சகர் இந்தியாவுக்கு திரும்பினால் உடனே பிடித்து ஒப்படைக்குமாறு குடியேற்ற அதிகாரிகளுக்கு முன்னெச்சரிக்கை செய்யப்பட்டது. கடந்த ஜூன் 22ஆம் தேதி மும்பை விமான நிலையம் வந்திறங்கிய பார்ப்பன அர்ச்சகர் கைது செய்யப்பட்டார். திருச்சி மத்தியச் சிறையில் அடைக்கப்பட்ட இந்த ‘மோசடி’ அர்ச்சகருக்கு அடுத்த இரு நாள்களிலேயே பிணை கிடைத்து விட்டது. அரசு தரப்பிலும் அவரை பிணையில் விடுதலை செய்ய எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. ‘சாமி’ சிலைகளுக்கு சக்தி ஏதும் இல்லை என்பது அர்ச்சகர்களுக்கு நன்றாகவே தெரியும். அதனால்தான் பல கோடி மோசடி செய்வதோடு தண்டனையிலிருந்தும் தப்பித்து விடுகிறார்கள். ‘சூத்திர’ பூசாரி ஒருவர் இதே திருட்டை செய்திருந்தால் இத்தகைய சலுகைகள் கிடைக்குமா? இரண்டே நாளில் பிணை கிடைத்திருக்குமா? மட்டுமல்ல; ஏடுகளும் இந்தச் செய்தியை பெரிதுபடுத்தி வெளியிடாமல் அடக்கி வாசித்தன. சில ஏடுகள் செய்திகளை வெளியிடவே இல்லை.

### வேத மதமும் கத்தோலிக்க கிறிஸ்தவமும்

சபரிமலை அய்யப்பன் கோயிலுக்குள் பெண்களை அனுதிக்க மறுக்கிறது பார்ப்பன வேத மதம். பாகுபாடுகள் கூடாது என்று உச்சநீதிமன்றமே தீர்ப்பளித்தாலும் தீர்ப்பை மதிக்க முடியாது என்று கேரளாவில் பா.ஜ.க. வினர் மட்டுமல்ல; காங்கிரசாரும் சேர்ந்து கொண்டு போர்க் கொடி தூக்கினர். ஆளும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பெண்களை அனுமதிப்பதில் உறுதியாக இருந்தது. நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க.வும் காங்கிரசும் இதையே தேர்தல் பிரச்சாரமாக முன் வைத்தன. ஆளும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஒரு இடத்தில் மட்டுமே வெற்றி பெற்றது. தேர்தல் தோல்வி குறித்து ஆராய்ந்தது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் குழு. “உச்சநீதிமன்றத் தீர்ப்பை வரவேற்று பல இலட்சம் பெண்களைத் திரட்டி, ‘மதில் சுவர்’ நடத்திய அடுத்த நாளே இரண்டு பெண்கள் சபரிமலை கோயிலுக்குள் நுழைந்தனர். இந்தப் பெண்கள் நுழைவுதான் தேர்தல் தோல்விக்குக் காரணமாக அமைந்துவிட்டது. எதிர்க் கட்சிகள் இதை மய்யமாக்கிப் பிரச்சாரம் செய்தன” என்று கட்சி முடிவுக்கு வந்துள்ளது. கட்சியின் அதிகாரப்பூர்வமான ஏடான ‘தேசாபிமானி’ இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

வேத பார்ப்பன மதம் இந்த நூற்றாண்டிலும் மதம் - பழக்க வழக்கம் என்ற பெயரால் ‘சூத்திரர்’ மற்றும் ‘பெண்’களைப் பாகுபடுத்தி அவமதிக்கிறது. அதே நேரத்தில் கத்தோலிக்க கிறிஸ்துவ மதம் காலத்துக்கேற்ப மாறுதலுக்கு தயாராகி வருகிறது. கடந்த ஜூன் 15ஆம் தேதி, கத்தோலிக்க தலைமையிடமான வாடிகனி விருந்து போப் ஓர் ஆவணத்தை வெளியிட்டுள்ளார். கத்தோலிக்க பாதிரியார்கள் திருமணமாகாதவர்களாக இருக்க வேண்டும் என்ற சம்பிரதாயத்தை மாற்றி நல்ல ஒழுக்கமுள்ள திருமணமானவர்களை பாதிரியார் களாக நியமிக்க முடிவு செய்திருக்கிறது. அதேபோல் ‘சர்ச்’களை நிர்வகிக்கும் நிருவாக சபையிலும் பெண்களை நியமிக்கவும் முடிவு செய்துள்ளதாக அந்த ஆவணம் கூறுகிறது. அமேசான் போன்ற பகுதிகளில் திருமணமாகாத கத்தோலிக்கர்கள் பாதிரியாராக பணி செய்வதற்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் வாடிகன் இந்த மாற்றத்துக்கு முன் வந்துள்ளதாக ‘வாடிகன்’ வெளியிட்ட ஆவணம் கூறுகிறது. திருமணமானவர்கள் மூத்தவர்களாக இருக்க வேண்டும் என்பது மட்டுமே நிபந்தனை. ●

# மாநில கல்வி உரிமைகளைப் பறிக்கும் கல்விக் கொள்கை!

***இந்தியாவின் கல்விச்சூழல் விசித்திரமானது. பிரமாண்டமானது. 30 கோடி பேர் இந்தியாவில் பள்ளி மற்றும் கல்லூரிகளில் படிக்கிறார்கள். 14 இலட்சம் பள்ளிகள் உள்ளன. 907 பல்கலைக் கழகங்கள் உட்பட சுமார் 50 ஆயிரம் உயர்கல்வி நிலையங்கள் உள்ளன. இந்தியக் கல்விச் சந்தையின் மதிப்பு சுமார் ஏழு லட்சம் கோடி ரூபாய். ஒவ்வொரு மாநிலத்திலும் வித்தியாசமான கல்விச் சூழல் நிலவும் இந்தத் தேசத்துக்கு பொதுவான கல்வித் திட்டம் என்பதே பொருத்தமில்லாத ஒன்று!***

இந்த நிலையில், நம் பள்ளிக்கல்வி மற்றும் உயர்கல்வியை அடியோடு புரட்டிப்போடுகிற பல அம்சங்களைக்கொண்டிருக்கும் இந்தக் கல்விக் கொள்கை, கல்வியாளர்கள் மத்தியில்கூட கவனிக்கத்தக்க அளவுக்கு விவாதங்களை எழுப்ப வில்லை. இந்தியாவின் கல்விமுறையைச் சீர்திருத்து வதற்காக மத்திய அரசு, விண்வெளி அறிவியலாளர் கஸ்தூரிரங்கன் தலைமையில் ஒன்பது பேரைக் கொண்ட கமிட்டி ஒன்றை அமைத்தது. வழக்கமாக, 'நாட்டில் பாலாறும் தேனாறும் ஓடிக் கொண் டிருக்கிறது' என்கிற ரீதியில்தான் இதுபோன்ற அறிக்கைகள் பேசும். ஆனால், கஸ்தூரிரங்கன் கமிட்டியின் அறிக்கை, இந்தியக் கல்விச்சூழலின் பிரச்னைகள் குறித்துப் பேசியிருக்கிறது. ஆனால், அதற்கான தீர்வுகளாக அவர்கள் தருபவை சரியானவை தானா என்பதில்தான் பிரச்னை.

- உலகம் முழுவதுமே, 'பின்லாந்து போல கல்விச் சூழலை உருவாக்க வேண்டும்' என்று சொல்லிக் கொண்டிருக்கிறது. அங்கே ஆறு வயதில்தான் குழந்தைகள் மழலையர் பள்ளிகளில் சேர்கிறார்கள். ஏழு வயதில்தான் முறையான கல்வி தொடங்குகிறது. ஆனால், நம் தேசியக் கல்விக் கொள்கை, மூன்று வயதிலேயே குழந்தைகளைப் பள்ளிக் கல்விக்குள் கொண்டு வருகிறது.

- கிராமப்புற ஏழைக் குடும்பங்களில் பிறக்கும் குழந்தைகள், மூன்று வயதில் அங்கன்வாடிக்குப் போய் சத்து உருண்டையும், சத்துணவும், முட்டையும் சாப்பிட்டபடி பொழுதைப் போக்குகின்றன. மத்திய அரசின் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறையின் கண்காணிப்பில் இந்த அங்கன்வாடிகள் இயங்கி வருகின்றன. குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து தரவேண்டும் என்பதுதான் இந்த அங்கன்வாடி களின் இலக்கே தவிர, கல்வி தருவது அல்ல! அதனால், பெயரளவில் பாடங்கள் நடத்தப்படு கின்றன. அங்கன்வாடி பணியாளர்கள் யாரும் முறைப்படி ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் அல்ல.

- இன்னொரு பக்கம் நகர்ப்புற பணக்காரக் குழந்தைகள், மூன்றரை வயதில் உயர்தரமான கான்வென்ட்டில் எல்.கே.ஜி படிக்கப் போகிறார்கள். துரதிர்ஷ்டவசமாக, அங்கன்வாடி குழந்தைகள் இவர்களுடன்தான் நீட் உள்ளிட்ட போட்டித் தேர்வுகளில் போட்டியிட வேண்டும்.

- அங்கன்வாடிகளோ, கே.ஜி வகுப்புகளோ பள்ளிக் கல்வியின் அங்கமாக இல்லை. 'அனைவருக்கும் சம வாய்ப்பு வழங்க வேண்டும்' எனக் கூறும் தேசிய கல்விக் கொள்கை, குழந்தைகளை மூன்று வயதிலிருந்தே பள்ளிக் கல்வி வரம்புக்குள் கொண்டு வரச் சொல்கிறது. எனவே, கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக மத்தியப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் இருந்துவந்த அங்கன்வாடிகள் இனி கல்வித்துறையின் அங்கமாக ஆகிவிடும். அங்கன்வாடிகளையும் பள்ளிகளையும் இணைத்துக் கல்வி வளாகங்களை உருவாக்கச் சொல்கிறது கஸ்தூரிரங்கன் கமிட்டி.

- இப்போது இருக்கும் பத்தாவது மற்றும் பிளஸ் 2 பள்ளிக் கல்வி முறையும் மாற்றப்படுகிறது. பள்ளிக் கல்வி என்பது இனி 15 ஆண்டுகள். மூன்று வயது முதல் ஐந்து ஆண்டுகள் அடிப்படைக் கல்வி. பிறகு மூன்று ஆண்டுகள் ஆரம்பக் கல்வி. மூன்று ஆண்டுகள் நடுநிலைக் கல்வி. நான்கு ஆண்டுகள் உயர்நிலைக் கல்வி (5+3+3+4=15), மேல் நிலைக் கல்வி எனத் தனியாக இனி இருக்காது. அது உயர்நிலைக் கல்வியாக மாற்றப்படும்.

- 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை செமஸ்டர் முறை அமலுக்கு வரும். பத்தாம் வகுப்பு, 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகள் கிடையாது. அதற்குப் பதிலாக நான்கு ஆண்டுகளில் எட்டு செமஸ்டர் தேர்வுகளை மாணவர்கள் எழுத வேண்டும். (கல்லூரிகளில் இளநிலைப் பட்டம் படிக்கச் சேர்வதற்கே நீட் போல ஒரு தேர்வு கொண்டு வரும் உத்தேசத்தில் உள்ளது மத்திய அரசு. இனி எந்தக் கல்லூரியில் சேர்வதற்கும் தனித் தேர்வு எழுத வேண்டிய சூழல் வந்துவிடும் என்பதால், பிளஸ் 2 என்பது தனியாகத் தேவைப்படாது.)

- இப்போது கல்வி உரிமைச் சட்டத்தின்கீழ் எட்டாம் வகுப்பு வரை கட்டாயக் கல்வி தருவது அமலில் உள்ளது. இதை 12-ம் வகுப்பு வரை விரிவுபடுத்துமாறு தேசியக் கல்விக் கொள்கை வலியுறுத்துகிறது.

- ஆசிரியர், மாணவர் விகிதம் 1:30 என்ற அளவில் இருக்குமாறு பார்த்துக்கொள்ளப்படும்.

- ஆரம்பப் பள்ளி முடித்துவரும் மாணவர்களில் பலர் எழுத்துக் கூட்டிப் பாடங்களைப் படிக்கத் தெரியாதவர்களாகவோ, அடிப்படைக் கணக்கு களைக்கூட போடத் தெரியாதவர்களாகவோ இருக்கின்றனர். இந்த நிலையை மாற்ற ஒவ்வொரு நாளும் பிள்ளைகள் படிக்கவும் கணக்குகள் போடவும் புதுமையாகச் சிந்திக்கவும் பாடவேளை ஒதுக்கப்படும்.

- **மேலோட்டமாகப் பார்க்கும்போது இந்தப் பரிந்துரைகளில் பெரும்பாலானவை சிறப்பாகத் தோன்றும். ஆனால், இவற்றை நடைமுறையில் சாத்தியமாக்க எந்த வழிமுறையும் பரிந்துரைகளில் சொல்லப்பட வில்லை. குருகுலப் பள்ளி முதல் சர்வதேசப் பள்ளி வரை இந்தியாவில் ஒன்பது விதமான பள்ளிகள் உள்ளன. கரும்பலகையும் ஆசிரியர்களும்கூட இல்லாத பள்ளிகள் ஒரு பக்கம்; ஸ்மார்ட் வகுப்பறைகளும் நுனி நாக்கு ஆங்கிலம் பேசும் ஆசிரியர்களும் கொண்ட பள்ளிகள் இன்னொரு பக்கம். இங்கு 'சம வாய்ப்பு' எப்படி வரும்?** அங்கன்வாடிகளை, பள்ளிகளுடன் இணைப்பது பெருமளவு நிதி தேவைப்படும் விஷயம். அதை செலவிடுவது மாநில அரசா, மத்திய அரசா? ஏற்கெனவே இருக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கையையே மாநில அரசுகள் குறைத்துக் கொண்டே வருகின்றன. புதிய ஆசிரியர்கள் எங்கிருந்து வருவார்கள்?

'ராஷ்ட்ரிய சிக்ஷா ஆயோக்' என்ற பெயரில்,
தேசிய கல்வி ஆணையம் அமைய உள்ளது.
பிரதமர்தான் இதன் தலைவர். கல்லூரி அங்கீகாரம்
தருவது முதல் ஸ்காலர்ஷிப் தருவது வரை இந்தியாவில்
கல்வி தொடர்பாக முடிவெடுக்கும் எல்லா அமைப்புகளும்
இதன் கட்டுப்பாட்டில் வந்து விடும்.

- மூன்றாம் வகுப்பு முதல் பிள்ளைகள் என்ன படிக்க வேண்டும் என்பதை மத்திய அரசு தீர்மானிக்கும். இதற்காக 'மனிதவள மேம்பாட்டுத் துறை' என்ற பெயரையே 'கல்வித் துறை' என மாற்றச் சொல்கிறது தேசியக் கல்விக் கொள்கை. எனில், மாநில அரசுகள் இனி என்ன செய்யும்? இப்படி விடை தெரியாத பல கேள்விகளை அந்தரத்தில் விட்டுச் செல்கிறது இந்தப் புதிய கொள்கை.

- உயர்கல்வி விஷயத்திலும் இப்படித்தான் உள்ளது. ஆசிரியர்களின் தரத்தைப் பற்றிக் கவலைப்படும் கஸ்தூரிரங்கன் கமிட்டி, புற்றீசல் போல தொடங்கப்பட்ட ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளை மூடச் சொல்கிறது. இளங்கலைப் படிப்பும் பி.எட் படிப்பும் இணைந்து நான்கு ஆண்டு பட்டம் புதிதாகத் தொடங்கப்படும் என அறிவித்துள்ளது. இப்படி பல விஷயங்கள் ஒழிக்கப்படுகின்றன.

- பல்கலைக்கழக மானியக் குழு கலைக்கப் படும். அதற்குப் பதிலாக தேசிய உயர்கல்வி ஒழுங்கு முறை ஆணையம் (NHERA-National Higher Education Regulatory Authority) அமைக்கப்படும். உயர்கல்வியை ஒழுங்குபடுத்தும் ஒரே அமைப்பாக இது இருக்கும். அகில இந்திய தொழில்நுட்பக் கவுன்சில் (ஏ.ஐ.சி.டி.இ) போன்ற அமைப்புகள் வெறுமனே தொழில்நுட்பத் தரத்தை வரையறுக்கும் அமைப்புகளாக மட்டுமே இருக்கும்.

- கல்லூரிகள் ஏதாவது ஒரு பல்கலைக்கழகத்தில் இணைப்பு பெறும் முறை ஒழிக்கப்படும். ஒவ்வொரு உயர்கல்வி நிலையமும் சுயேச்சை யாகச் செயல்படும். வரும் 2032-ம் ஆண்டுக்குள் கல்லூரிகள் தன்னாட்சி பெற்ற கல்லூரியாகவோ, தனி பல்கலைக்கழகமாகவோ மாறிவிட வேண்டும். அல்லது ஏதாவது பல்கலைக் கழகத்துடன் இணைந்துவிட வேண்டும்.

- 2020-ம் ஆண்டுக்குப் பிறகு தன்னாட்சிக் கல்லூரிகளை மட்டுமே புதிதாகத் தொடங்க முடியும். எந்த புதுக் கல்லூரியும் பல்கலைக்கழக இணைப்பு பெற முடியாது.

- இளங்கலை, இளம் அறிவியல் பட்டங்கள் பலவும் நான்கு ஆண்டுகள் படிப்பதுபோல பாடத்திட்டம் மாற்றி அமைக்கப்படும்.

- எம்.ஃபில் ஆராய்ச்சிப் பட்டம் கைவிடப்படும். இனி பிஹெச்.டி மட்டுமே ஆராய்ச்சிப் படிப்பாக இருக்கும்.

- நிகர்நிலைப் பல்கலைக்கழகம் என்பது இனி இருக்காது. இனி பல்கலைக்கழகங்களின் வேலை, கல்லூரிகளைக் கண்காணிப்பது அல்ல... ஆராய்ச்சி செய்வதும் பாடம் நடத்துவதும் மட்டுமே.

இவ்வளவையும் விவரிக்கும் கல்விக் கொள்கை, கடைசியாக வைத்திருப்பதுதான் ட்விஸ்ட். திட்டக் குழுவைக் கலைத்துவிட்டு, மாநில அரசுகளுக்கு எந்த அதிகாரமும் தராத நிதி ஆயோக் அமைப்பை உருவாக்கினார் மோடி. இப்போது **'ராஷ்ட்ரிய சிக்ஷா ஆயோக்' என்ற பெயரில், தேசிய கல்வி ஆணையம் அமைய உள்ளது. பிரதமர்தான் இதன் தலைவர். கல்லூரி அங்கீகாரம் தருவது முதல் ஸ்காலர்ஷிப் தருவது வரை இந்தியாவில் கல்வி தொடர்பாக முடிவெடுக்கும் எல்லா அமைப்புகளும் இதன் கட்டுப்பாட்டில் வந்து விடும்.** இந்த அமைப்புக்கு வழிகாட்ட இரண்டு குழுக்கள் அமைக்கப்படும். கல்வியாளர்கள், சமூக ஆர்வலர்கள், அமைச்சர்கள் இதில் இருப்பார்கள். எந்தத் தகுதியின் அடிப்படையில் இவர்கள் நியமிக்கப் படுவார்கள் என தேசிய கல்விக் கொள்கை எதையும் சொல்லவில்லை.

கல்லூரிகளுக்குக்கூட தன்னாட்சி வழங்கத் தயாராக இருக்கிற கல்விக் கொள்கை, 'கல்வி விஷயத்தில் மாநிலங்களுக்கு எந்த அதிகாரமும் தரத் தயாராக இல்லை' என்பதையே சுற்றி வளைத்துச் சொல்லியிருக்கிறது!

### தமிழில் வேண்டும்!

தேசிய கல்விக் கொள்கை வரைவு அறிக்கை ஆங்கிலத்தில் மட்டுமே வெளியாகியுள்ளது. மே 31ஆம் தேதி மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறையின் இணையதளத்தில் இது வெளியிடப்பட் டுள்ளது. 'ஜூன் 30 வரை இந்த வரைவு தொடர்பாகப் பொதுமக்கள் கருத்து அளிக்கலாம்' எனக் கூறப்பட்டுள்ளது. 'சுமார் 400 பக்கங்களுக்கு மேல் இருக்கும் இதைப் படித்து கருத்துச் சொல்ல போதுமான காலக்கெடு வேண்டும். தமிழ் உட்பட மாநில மொழிகளில் இதைத் தர வேண்டும்' எனக் கல்வியாளர்கள் சார்பில் கோரிக்கை வைக்கப்பட் டுள்ளது.

இந்த அறிக்கையை கஸ்தூரிரங்கன் கமிட்டி ஏற்கெனவே மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சராக இருந்த பிரகாஷ் ஜவடேகரிடம் கடந்த 2018 டிசம்பர் 15ஆம் தேதி கொடுத்தது. ஆனால், அது ஆறு மாதங்களாக அப்படியே தூசு படிந்து கிடந்தது. இப்போது ரமேஷ் போக்ரியால் இந்தத் துறையின் அமைச்சரானதும் அவரிடம் மீண்டும் தரப்பட்டு, அவசர அவசரமாக இதைச் சட்டமாக்கும் நடவடிக்கைகள் தொடங்கியுள்ளன. 'இவ்வளவு அவசரம் ஏன்?' என்பதுதான் கல்வியாளர்களின் கேள்வி.

**தி.முருகன்**

## தெருமுனைக் கூட்டங்கள் : திருச்செங்கோடு கழகம் முடிவு

*திருச்செங்கோடு நகர திராவிடர் விடுதலைக் கழகத்தின் கலந்துரையாடல் 30.06.2019 அன்று காலை 10 மணிக்கு பெரியார் மன்றத்தில் தொடங்கி நடைபெற்றது. நிகழ்விற்கு, நகர செயலாளர் பூபதி தலைமை வகிக்க, கழகத் தோழர் சோமசுந்தரம் முன்னிலை வகித்தார்.*

*1) தெருமுனைப் பிரச்சாரங்கள் நடத்துவது; 2) ஹைட்ரோ கார்பன், அணுக்கழிவுக் கூடம், எட்டுவழிச் சாலை போன்ற மக்கள் விரோதத் திட்டங்களை விளக்கும் வகையில் துண்டறிக்கைப் பிரச்சாரம் செய்வது; 3) காமராஜர் பிறந்தநாள் விழாவை ஏதேனும் அரசுப் பள்ளியில் கொண்டாடுவது – ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கார்த்தி நன்றி கூறினார்.*

# இராஜராஜசோழனின் கதை என்ன? (3)

# களப்பிரர் காலம் இருண்ட காலமா?

***இயக்குநர் இரஞ்சித், இராஜராஜசோழன் குறித்துப் பேசியதற்காகப் பார்ப்பன இராஜாக்களும், 'அவாளின் எடுபிடி'களான, 'சூத்திர' இந்து முன்னணிகளும் கடும் எதிர்ப்பு தெரிவித்து, இரஞ்சித்தை கைது செய்ய வேண்டும் என்று ஓலமிடுகின்றனர். நீதிமன்றங்களும் இராஜராஜசோழனைப் பற்றிப் பேசுவதா என்று கவலைப்படுகின்றன. இராஜராஜ சோழனின் வரலாறுதான் என்ன?***

இராஜராஜனின் 'பொற்கால ஆட்சி'யை அனுபவித்தவர்கள் யார்? தீட்சிதப் பார்ப்பனர்கள் தனக்கு பட்டம் சூட்ட மறுத்ததால் பீகார் பகுதியில் இருந்து ஆயிரக்கணக்கான பார்ப்பனர்களை சோழநாட்டிற்கு அழைத்து வந்து இராஜராஜன் அவர்களைக் குடியேற்றினான். தமிழக மன்னர்களின் வரலாற்றில் முதன்முதலாக இராஜகுரு என்றொரு பதவியை உருவாக்கி, ஈசான சிவப் பண்டிதர் எனும் காஷ்மீரப் பார்ப்பனரை அப்பதவியில் நியமித்தான். பின்னர் பார்ப்பனர்களே இப்பதவிக்கு வருவது மரபாக்கப்பட்டது. இராணுவப் படையெடுப்பு போன்றவற்றை தான் கவனித்துக் கொண்டு, குடிமக்கள் நிர்வாகத்தை இராஜகுருவின் ஆலோசனைக்கு விட்டிருந்தான்.

பிரம்மதேயம் என்ற பெயரில் பார்ப்பனர்களுக்கு நிலங்கள் வழங்கப்பட்டன. அகரங்கள், அக்கிரகாரங்கள், சதுர்வேதிமங்கலங்கள் எனப்படும் தனிக் கிராமங்கள், கோவில்கள், மடங்கள் ஆகியவை அவர்களின் கட்டுப்பாட்டில் இருந்தன. 250 ஊர்கள் சோழர் காலத்தில் பார்ப்பனர்களுக்கு தானமாக வழங்கப்பட்டன. இந்திய சட்டங்கள் எவையும் செல்லுபடியாகாத இன்றைய சிறப்புப் பொருளாதார மண்டலங்களைப் போன்றே, குற்ற விசாரணைக் காகக்கூட அரசப்படையினர் இத்தகைய 'மங்கலங் களின்' உள்ளே நுழைய தடை விதிக்கப்பட்டிருந்தது.

குடவோலை முறை எனும் ஜனநாயகமுறை சோழர் காலத்தில் இருந்ததாகக் கூறப்படுவது ஒரு இமாலயப்பொய். ஊர்ச்சபைகளைத் தேர்ந்தெடுக்க ஓலைகளில் வேட்பாளர்கள் பெயர்கள் எழுதப்பட்டு ஒரு குடத்துக்குள் அவ்வோலைகள் போடப்படும். பின்னர் குடத்துக்குள் கையை விட்டு எடுக்கப்படும் ஓலையில் வரும் பெயருக்குரியவர் சபைக்குத் தேர்வு செய்யப்படுவார். இந்த திருவுளச்சீட்டு ஜனநாயகத்தில் வேட்பாளராக நிற்பதற்கு வேதம் கற்றிருக்க வேண்டும், நில உடைமையாளராக இருக்க வேண்டும் என்ற இரு தகுதிகள் வைக்கப்பட்டிருந்தன.

வேதக் கல்வி பார்ப்பனர்களுக்கு மட்டுமேயான உரிமையாக இருந்ததால், பார்ப்பன நிலவுடைமை யாளர்கள் மட்டுமே ஊர்ச்சபைக்குத் தேர்வு செய்யப் பட்டனர். இதுதான் குடவோலை முறையின் யோக்கியதை. அதுமட்டுமல்ல, நிலவுடைமையாளர் களான பிராமணர்கள் மட்டுமே பெருவுடையார் கோவிலின் நிதி நிர்வாகிகளாக (பண்டாரி) இருக்க முடியும் என்று இராஜராஜன் ஆணை பிறப்பித் திருந்தான்.

பார்ப்பனர்களுக்கு தன் எடைக்கு எடை (துலாபாரம்) தங்கமும், தானியமும் பலமுறை தானமாகத் தந்தான் இராஜராஜன். அதுமட்டுமல்ல, அவனும் அவனது தமக்கை குந்தவையும் தமது 'பிறவி இழிவு நீங்கி' சொர்க்கம் செல்வதற்காக, தங்கத்தால் பசுமாடு ஒன்றைச் செய்து, அதன் வயிற்றுக்குள் சென்று வந்த பின்னர், அந்த தங்கப் பசுவை பார்ப்பனர்க்கு தானமாகத் தந்துவிடும் ஹிரண்யகர்ப்ப தானம் செய்தனர்.

மண்ணும் பொன்னும் தந்து பார்ப்பனர்களை மகிழ்வித்த இராஜராஜன், தனது அரசாட்சியிலும் பார்ப்பன நீதிமுறைகளையே பின்பற்றினான். தனது அண்ணன் ஆதித்த கரிகாலனைக் கொலை செய்த பார்ப்பனர்களைக்கூட அவன் தண்டிக்கவில்லை. சோழ எல்லை தாண்டி சேர நாட்டிற்கு நாடு கடத்தினான். "கொலைக் குற்றம் செய்தாலும் பார்ப்பனர்களுக்கு மரணதண்டனை தரக்கூடாது" என்ற மனுதரும விதியைத் தனக்கே பிரயோகித்துக் கொண்ட மன்னன், மக்கள் மீது அவ்விதியை எங்ஙனம் நிலைநாட்டியிருப்பான் என்பதை யாரும் புரிந்துக் கொள்ளலாம்.

சோழநாட்டின் ஊர்களில் நிலம், ஊருக்குப் பொதுவாயினும், அவை கோவிலுக்குச் சொந்த மாக்கப்பட்டு, அதில் வேளாளரின் ஆதிக்கம் நிலைநாட்டப்பட்டது. விளைநெல்லில் பெரும்பங்கு, குத்தகை உரிமையாகவும் (காராட்சி) கோவிலுக்காக மேற்பார்வை ஊதியமாகவும் (மீயாட்சி)




வேளாளருக்கு மட்டுமே கிடைத்தது.

வேளாளர் தம் மேற்பார்வையில் இருந்த நிலங்களில் 'காராட்சி', 'மீயாட்சி'ப் பங்குகளை முன்னிலும் அதிகமாக வசூலித்தபோது பயிரிட்ட குடிமக்கள் கிளர்ச்சி செய்துள்ளனர். இந்த வேளாளர் பங்குகளுக்கு மன்னன் உச்சவரம்பு நிர்ணயிக்காத தால், உழுகுடிகளையும் விவசாயக் கூலிகளையும் வேளாளச் சாதியினர் வரைமுறையின்றிச் சுரண்டிக் கொழுத்தனர். இராஜராஜனின் காலம் மட்டுமின்றி, சோழர் காலம் முழுவதுமே வேளாளர், பார்ப்பனக் கூட்டணிக்கு பெருவாழ்வைத் தந்த பொற்காலமாக இருந்தது.

**களப்பிரர் காலம்: உழைக்கும் மக்களின் பொற்காலம்!**

இராஜராஜனது பொற்காலத்தை விதந்தோதும் சதாசிவ பண்டாரத்தாரில் இருந்து கருணாநிதி வரை தமிழக வரலாற்றில் இருண்டகாலமாக 'களப்பிரர்' காலமிருந்ததெனக் குறிப்பிடத் தவறுவதே இல்லை. அந்த 'இருண்டகாலத்தை' புரிந்து கொண்டால்தான் சோழர் பொற்காலத்தின் மகிமையை விளங்கிக் கொள்ள இயலும்.

களப்பிரர்களின் ஆட்சிக்காலத்துக்கு (கி.பி. 4 முதல் 6 ஆம் நூற்றாண்டுவரை) முந்தைய சங்கக் காலத்தில் (கி.பி. 3ஆம் நூற்றாண்டு வரை) விவசாய உற்பத்தி வளர்ச்சி பெற்று முற்காலப்பாண்டியர்களின் அரசு உருவாகி வந்தது. நிலவுடைமை என்பது பொதுவில் இருந்த வேளிர்களின் காலம் அது. பாண்டிய ஆட்சியின்போது விவசாயமயமாக்கல் தீவிரப்படுத்தப்பட்டு விளிம்புகளிலிருந்த இனக்குழு சமூகம் விவசாய விரிவாக்கத்துக்குள் கொண்டு வரப்பட்டு, அவர்களின் உபரி உறிஞ்சப்பட்டது. அவர்களின் நிலங்கள் பிடுங்கப்பட்டன. பார்ப்பனர் களுக்குத் தானமாக்கப்பட்டன. அரசனுக்கான வரியாக இனக்குழுக்களின் உழைப்பு உறிஞ்சப் பட்டது. இதனை எதிர்த்து கிளர்ந்தெழுந்த இனக்குழு சமூகங்களின் எழுச்சி தமிழகமெங்கும் 300 ஆண்டுகள் தொடர்ந்தது. களப்பிரர் ஆட்சிக் காலமாகக் குறிப்பிடப் படும் காலம் இதுதான்.

இக்காலத்தில் நிலங்கள் மீண்டும் 'பொது'வாக்கப் பட்டன. பார்ப்பனர்களுக்குத் தானமாகத் தரப்பட்ட நிலங்கள் பறிக்கப்பட்டன. இந்த 'இருண்ட' காலத்தில்தான் தமிழிலக்கிய வளர்ச்சி உச்சத்தில் இருந்தது. மணிமேகலை, சீவக சிந்தாமணி, எலி விருத்தம், கிளி விருத்தம், கார் நாற்பது, இனியவை நாற்பது போன்ற இலக்கிய நூல்களும், விருத்தம், தாழிசை போன்ற பாவகைகளும், உரை நூல்களும் உருவாக்கப்பட்டன. தமிழுக்கு வச்சிரநந்தி தலைமையில் சங்கம் ஒன்று அமைக்கப்பட்டு தமிழ் இலக்கியம் வளர்ச்சி பெற்றது. வைதீகத்தை வீறுகொண்டு எதிர்த்து, 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று பிரகடனம் செய்த திருக்குறளும் களப்பிரர் காலத்தில்தான் இயற்றப்பட்டது. தமிழக மெங்கும் பவுத்தமும் சமணமும் தழைத்தோங்கி யிருந்த காலமும் இதுதான்.

இந்த 'இருண்டகால'த்தைத்தான் பல்லவர்களும் பாண்டியர்களும் வீழ்த்தினர். இனக்குழுக்களின் பொது நிலத்தை மீண்டும் பறித்து, பார்ப்பனர்களுக்கு தானமாக வழங்கினர். நிலத்தின் மீது நிலவிய பொதுவுடைமையை நீக்கியதனாலேயே 'பொது நீக்கி' என்று இம்மன்னர்கள் புகழப்பட்டனர்.

இன்று மண்ணின் மைந்தர்களான இருளர்கள் வீடுகட்ட நிலம் கேட்டால் தடியடியால் பதில் சொல்லும் 'ஆரூர்ச் சோழனின்' ஆட்சி, ஆயிரக் கணக்கான ஏக்கர் அரசுப் புறம்போக்கு நிலங்களைப் 'பொது நீக்கி' ஹூன்டாய், நோக்கியா போன்ற பன்னாட்டு நிறுவனங்களுக்கு வாரிவழங்கிக் கொண்டிருக்கிறதே, அதே போன்ற 'பொது நீக்கி'ய அரசைத்தான் பல்லவர்களும் பாண்டியர்களும் நிறுவினார்கள்.

அங்கொன்றும் இங்கொன்றுமாக சதுர்வேதி மங்கலங்களாக்கப்பட்ட பொது நிலங்கள், மிகப்பெரும் அளவில் பார்ப்பனர்களுக்கு தானமாக வும் வேளாளர்களுக்கு தனி உடைமையாகவும் ஆக்கப்பட்டது 'மா' மன்னன் இராஜராஜனின் ஆட்சியில்தான். பழங்குடி மக்களை அடித்து விரட்டிவிட்டு, மலைகளையும் காடுகளையும் பன்னாட்டு நிறுவனங்களுக்குத் தாரை வார்க்கின்றன இன்றைய 'புரிந்துணர்வு' ஒப்பந்தங்கள்.

இராஜராஜனின் காலத்திலும் அவன் வாரிசுகளின் காலத்திலும் தேவதானம், பள்ளிச் சந்தம், இறையிலி எனும் பெயரில் செப்பேடுகளில் பதியப்பட்டன. செழிப்பான காவிரிப் பாசன நிலங்களின் மீது, வேளாளர், பார்ப்பனக் கூட்டணியின் பிடி இறுகியது. ஏனைய சாதிகள் உழைக்கும் கூலிகளாக மாற்றப்பட்டனர். வானுயர நிற்கும் பெருவுடையார் கோவிலின் அடித்தளத்தில், பொற்காலப் புரட்டில் புதைந்திருக்கும் உண்மை இதுதான்.

வடக்கே மகதப் பேரரசின் அசோகனின் ஆட்சிக் காலத்தில் பார்ப்பன வேள்விகள் ஒட்டுமொத்தமாகத் தடை செய்யப்பட்டன. தெற்கே களப்பிரர் ஆட்சிக் காலத்திலோ பார்ப்பனர்களுக்குத் தரப்பட்டிருந்த தேவதானங்கள் பறிக்கப்பட்டு, நிலங்கள் பொது வாக்கப்பட்டன.

பவுத்தமன்னர் பிருகதத்தரின் ஆட்சியை வீழ்த்த கிளர்ச்சி செய்து, வட இந்தியாவில் பார்ப்பன மீட்சியை உருவாக்கியவன், பார்ப்பனத் தளபதி புஷ்யமித்திர சுங்கன். அதேபோல தமிழகத்தில் களப்பிரரை வீழ்த்தி, 'பொது நீக்கி', பவுத்தத்தையும் சமணத்தையும் ஒழித்து சைவத்தை நிலைநாட்டி, பார்ப்பனியத்துக்குப் புத்துயிர் கொடுத்தவர்கள்தான் பல்லவ, பாண்டியர்கள். இந்தப் பார்ப்பன மீட்சியின் உச்சத்தையே தொட்டவன் ராஜராஜன்.

தமிழின் மாபெரும் படைப்புகள், புதிதாகப் படைக்கப்பட்ட பாவினங்கள், விருத்தங்கள், அறநூலின் உச்சமான திருக்குறள் என களப்பிரர் கால இலக்கியங்கள் எண்ணற்றவை. சோழர் காலத்தில் உருவான இலக்கியங்கள் யாவை?

இன்று இராஜராஜனை 'மாமன்னன்' என்றும் அவனது ஆட்சி 'தமிழனின் பொற்காலம்' என்றும் புகழ்பவர்கள் "அக்காலத்தில் ஒரு மன்னன் அப்படித் தான் இருந்திருக்க முடியும்" என்று நியாயப்படுத்து கின்றனர். வரலாற்றில் கீதையும் இருந்தது. அதே காலத்தில் அதனை எதிர்த்து நின்ற பவுத்தமும் இருந்தது. அசோகன் இருந்தான். பவுத்தத்தை வீழ்த்திய புஷ்யமித்திர சுங்கனும் இருந்தான். பார்ப்பனர்க்கு தனிச் சலுகை நீக்கி நிலங்களைப் பொதுவாக்கிய களப்பிரர் இருந்தனர். பொதுவை நீக்கி பார்ப்பன தாசனாக வாழ்ந்த இராஜராஜனும் இருந்தான்.

கீதையா, பவுத்தமா? அசோகனா, சுங்கவம்சமா? களப்பிரரா, இராஜராஜனா? நாம் எந்தப் பக்கம் என்பதுதான் கேள்வி.

**நன்றி : 'வினவு' கட்டுரையிலிருந்து சில பகுதிகள்**

**(நிறைவு)**

**பரப்புரைப் பயணத்துக்கு ஆனைமலை ஒன்றிய கழகம் தயாராகிறது**

*30.06.2019 காலை 10 மணியளவில் ஒன்றிய தி.வி.க சார்பாக, ஆனைமலையில் கலந்துரையாடல் நடைபெற்றது. பரப்புரைப் பயணத்துக்கு தயார் ஆவது என முடிவு செய்யப்பட்டது.*

*கலந்துரையாடலில், ஒன்றிய தலைவர் அப்பாத்துரை, ஒன்றிய செயலாளர் அரிதாசு, ஒன்றிய அமைப்பாளர் சபரிகிரி, தோழர்கள் சிவா, கணேசன், மணி, பாலன், காஜா, சந்தோசு மற்றும் கோவை மாவட்டச் செயலாளர் யாழ் வெள்ளிங்கிரி, மடத்துக்குளம் இரா. மோகன் ஆகியோர் கலந்து கொண்டனர். கீழ்கண்ட தோழர்கள் கட்டமைப்பு நிதி வழங்கினர்.*

| | |
|---|---|
| ஏ.ஆர்.வி. சாந்தலிங்கம் - ரூ.10000/- | மருத்துவர் வசந்த ஆல்வா - ரூ. 3000/- |
| பழ.முருகானந்தம் - ரூ. 2000 /- | - ஆகியோர் கட்டமைப்பு நிதியை அளித்தனர். |

# மேட்டூரில் வட்டார மாநாடு: மாவட்டக் கழகம் முடிவு

திராவிடர் விடுதலைக் கழகத்தின் சேலம் மாவட்ட கலந்துரையாடல், ஜூன் 30 அன்று மேட்டூர் பெரியார் படிப்பகத்தில் காலை 10 மணிக்கு தொடங்கி நடைபெற்றது. கலந்துரையாடலுக்கு, சேலம் கிழக்கு மாவட்ட தலைவர் சக்திவேல் தலைமை வகிக்க, காவை ஈசுவரன், தலைமைக் குழு உறுப்பினர், முன்னிலை வகித்தார். நிகழ்வில், மத்திய, மாநில அரசின் மக்கள் விரோத போக்கை கண்டித்து மாநாடு நடத்துவது எனவும், மாநாட்டை ஏற்பாடு செய்வது குறித்தும் கலந்து ஆலோசிக்கப்பட்டு, பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1) மேட்டூரில் வட்டார மாநாடு நடத்துவது.

2) வட்டார மாநாட்டின் நோக்கங்களை விளக்கி மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றியங்களில் தெருமுனை கூட்டம் மற்றும் பொதுக்கூட்டம் நடத்துவது.

3) மாநாட்டிற்கான பணிகளை புதிய மாணவர் கழக தோழர்கள் செய்வார்கள்.

- என்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நிகழ்வில், சூரியக்குமார் சேலம் மேற்கு மாவட்ட தலைவர், டேவிட் சேலம் மேற்கு மாவட்ட செயலாளர், ஆர்.எஸ். சக்திவேல் தலைமைக் குழு உறுப்பினர் மற்றும் நகர, ஒன்றிய, கிளை கழக பொறுப்பாளர்கள், மாணவர் கழக புதிய தோழர்கள் உட்பட 35 தோழர்களுக்கு மேல் பங்கேற்றனர். முத்துகுமார் நன்றியுரையாற்றினார்.

# ஜாதி வெறிப் படுகொலை: பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு கழகத் தலைவர் நேரில் ஆறுதல்



ஜாதி வெறி மனிதத்தையே சாகடிக்கிறது. மேட்டுப்பாளையம் அருகே தலித் பெண்ணோடு குடும்பம் நடத்தியதற்காக மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த வினோத்குமார் என்ற 24 வயது இளைஞர், சொந்தத் தம்பியையே வெட்டிப் படுகொலை செய்து விட்டான். தாக்குதலுக்கு உள்ளாகிய தலித் பெண்ணும் மரணமடைந்து விட்டார். 24 வயதுள்ள இளைஞனைக்கூட ஜாதி வெறி எப்படி ஆட்டிப் படைக்கிறது என்பது தமிழ்நாட்டுக்கே அவமானம்.

கடந்த 5 ஆண்டுகளில் 185 ஜாதி வெறிக் கொலைகள் தமிழ்நாட்டில் நடந்துள்ளன. 'கவுரவக் கொலை'களே தமிழ்நாட்டில் நடப்பது இல்லை என்று ஓ.பன்னீர்செல்வம் முதலமைச்சராக இருந்தபோது சட்டசபையில் 'வாய் கூசாமல்' பேசினார். 2016ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம், ஜாதி வெறிப் படுகொலைகள் குறித்த விவரங்களை மாநில அரசுகளிடம் கேட்டது. 22 மாநில அரசுகள் விவரங்களை அனுப்பின. தமிழ்நாடு அரசு எந்த அறிக்கையையும் அனுப்பவில்லை. தேசிய சட்ட ஆணையம், ஜாதி வெறியோடு திருமணங்களைத் தடுக்க முனைவதை சட்டப்படி குற்றமாக்கும் மசோதா ஒன்றை 2011ஆம் ஆண்டு தயாரித்து நாடாளுமன்றத்துக்கு அனுப்பியது. மசோதா - நாடாளுமன்ற அலமாரியில் தூங்குகிறது.

சங்கர் படுகொலைக்குப் பிறகு தமிழ்நாட்டையே உலுக்கியிருக்கிறது இந்த ஜாதி வெறிப் படுகொலை.

கடந்த ஜூன் 26 அன்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கோவை மருத்துவமனையில் பாதிக்கப்பட்ட தலித் குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். கழகத் தோழர்கள் நேருதாஸ், நிர்மல்குமார், வெங்கட் உடன் சென்றிருந்தனர்.

# ஜாதிக் கட்சி – பார்ப்பனர்களுக்கு எதிராக சாட்டையைச் சுழற்றும் 'தர்ம பிரபு'




'காதல்' - 'பேய்' - 'சண்டை' என்று மசாலாக்களைக் கொண்ட திரைப் படங்கள் புற்றீசல்களாக வந்து கொண் டிருக்கும் நிலையில் 'தர்ம பிரபு' போன்ற சமூகச் சிந்தனைகளைக் கொண்டு மக்களுக்கான அரசியலைப் பேசும் படங்கள் வெளி வருவது மிகவும் அபூர்வம்.

முத்துக்குமரன் எழுதி இயக்கி, யோகி பாபு கதாநாயகனாக நடித்து வெளி வந்திருக்கும் 'தர்மபிரபு' - பார்ப்பனர்கள் சூழ்ச்சி, ஜாதிக் கட்சிகளின் வாக்கு வங்கி அரசியலை சாட்டையால் அடித்து நொறுக்குகிறது. 'துக்ளக்' சோ, பார்ப்பனர் உருவத்தில் ஒரு பாத்திரமே உருவாக்கப்பட்டுள்ளது. கராத்தேயில் கறுப்பு பெல்ட் வாங்கியவர்கள்கூட வெள்ளை பெல்டுக்கு (பூணூல்) பயப்பட வேண்டும் என்று 'சோ' வடிவில் வரும் 'கோ. அரங்கசாமி' என்ற பாத்திரம் பேசுகிறது. பெரியாரின் 'கடவுளை மற மனிதனை நினை' என்ற கொள்கையின் நியாயத்தை எமதர்மனாக வரும் புராணப் பாத்திரம் புகழ்ந்து பேசுகிறது. பெரியார், அம்பேத்கர், காந்தி, சுபாஷ் சந்திரபோஸ் போன்ற தலைவர்களின் இன்றைய தேவையையும் வலியுறுத்துகிறது. அதில் பெரியாருக்கும் அம்பேத்கருக்குமே கூடுதல் அழுத்தம் தரப்பட்டுள்ளது. 'தலைவிதி' என்ற தத்துவம், வேறு ஓர் இனத்தை அடிமைப்படுத்த நாம் கண்டுபிடித்தது என்று 'துக்ளக்' சோ பாத்திரம் பேசுகிறது.

'மயிரைக் கட்டி மலையை இழுக்கிறோம்; வந்தால் மலை; போனால் மயிலாப்பூர்' என்று 'எமதர்மன்' பேசுகிறான். உழைக்கும் மக்கள் கட்சியாக ஜாதி கட்சி உருவகம் செய்யப்பட்டு அந்தக் கட்சியினரின் ஜாதி வெறி, வாக்கு வங்கி, அரசியலை மிகத் துணிவுடன் அம்பலப்படுத்துகிறது. இந்தப் படத்துக்கு 'விமர்சனம்' எழுதவே பல ஏடுகள் அஞ்சி ஒதுக்கி நிற்கின்றன. 'தமிழ் இந்து' நாளேடு கடந்த வெள்ளிக் கிழமை (ஜூன் 28) இணையத்தில் ஏற்றிய விமர்சனத்தை ஏட்டில் வெளியிடவில்லை. சில பார்ப்பன ஆங்கில நாளேடுகள் இந்தப் படத்தை மிக மோசமாகத் திட்டித் தீர்த்துள்ளன.

தணிக்கைக் குழு இப்படத்தை எப்படி அனுமதித்தது என்று 'தினமலர்' பார்ப்பன நாளேடு கொதித்துப் போய் எழுதுகிறது. எந்த ஒரு திரைப்படமும் பார்ப்பனர்களை ஜாதி வெறிக் கட்சிகளை இவ்வளவு துணிவோடு அம்பலப்படுத்தியதில்லை என்றே கூறலாம்.

படத்தில் வரும் எல்லா கட்சிகளுமே அப்படியே நூற்றுக்கு நூறு பட்டைத் தீட்டப்பட்ட கொள்கையாகவே இருக்க வேண்டும் என்ற 'கொள்கைத் தூய்மை'ப் பார்வையோடு சிலர் முகநூலில் எழுதுகிறார்கள். மக்களிடம் சில கருத்துகளைக் கொண்டுச் சேர்க்கும்போது 'சமரசங்கள்' படத்தைத் தயாரிப்போருக்கு இருக்கவே செய்யும். அவற்றைத் தோண்டி எடுத்து ஆராய்ச்சி செய்வதைவிட மக்களிடமும் குறிப்பாக எதிரிகளிடம் அது என்ன தாக்கத்தை உருவாக்கியிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும்.

அந்த வகையில் 'தர்மப் பிரபு' மிகவும் துணிச்சலான படைப்பு. பெரியாரிய - அம்பேத்கரிய சிந்தனையாளர்கள் ஆதரவுக் கரம் நீட்ட வேண்டிய ஒரு படம்.

– கண்டு வந்தவன்

# தலைமை ஆசிரியரின் ஜாதி வெறியை எதிர்த்து களமிறங்கினர் கோவை கழகத் தோழர்கள்



கோவை சரவணம்பட்டி அருகே கரட்டு மேடு கந்தசாமி நகர் நகரில் உள்ள அரசு துவக்கப் பள்ளியில் தாழ்த்தப்பட்ட சமூகத்தை சார்ந்த குழந்தைகளிடம் ஜாதி வெறியுடன் தலைமையாசிரியர் ஜெயந்தி நடந்து வந்துள்ளார். மாவட்ட ஆட்சியரிடம் அந்த பகுதி மக்கள் புகார் அளித்தனர். இதை அறிந்த திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் வெங்கட் கிருஷ்ணன் நிர்மல் அந்த பகுதிக்கு நேரடியாக சென்று பாதிக்கப்பட்ட குழந்தை திவ்யபாரதி மற்றும் அங்கு படிக்கும் சில குழந்தைகளிடமும் அவர்களது பெற்றோர்களிடமும் என்ன நடந்தது என்பதை தெரிந்துகொண்டு அந்தப் பகுதிக்கு உட்பட்ட சரவணம்பட்டி காவல் நிலையத்தில் இது குறித்து சட்ட நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டுள்ளதா என்று கேட்டனர். அங்கு எதுவும் எடுக்கப்படவில்லை என்பது தெரிந்ததால். 26.6.2019 அன்று அந்த தலைமையாசிரியர் மீது சட்டப்படி தீண்டாமை வன்கொடுமை தடுப்பு சட்டத்தில் கைது செய்யக் கோரி திராவிடர் விடுதலை கழகத்தின் சார்பில் மாநகர காவல் ஆணையர் இடமும் மாவட்ட ஆட்சியாளர் அவர்களிடமும் மனு அளிக்கப்பட்டது.

மாவட்ட ஆட்சியர் உரிய நடவடிக்கை விரைவில் எடுப்பதாக உறுதியளித்தார். திராவிடர் விடுதலை கழகத் தோழர்களுடன் சமூக நீதி வழக்கறிஞர்கள் திராவிடர் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர் .

# டாக்டர் ரமேசுக்கு நேரில் ஆறுதல்

கோவை சமூக செயல்பாட்டாளர் டாக்டர் ரமேஷ், மனைவி ஷோபனா சாலை விபத்தில் மரணமடைந்தார். துணைவரை இழந்த நிலையிலும் தொடர் விபத்திற்கு காரணமான அப்பகுதி டாஸ்மாக் மதுபானக் கடையை அகற்றக் கோரி டாக்டர் ரமேஷ் போராட்டத்தில் ஈடுபட்டார். அதனால் அந்த மதுபானக் கடை தற்போது மூடப்பட்டுள்ளது. 26.06.2019 அன்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி, டாக்டர் ரமேஷை இல்லத்தில் சந்தித்து நடந்தவற்றை கேட்டறிந்து ஆறுதல் கூறினார். கழகத் தோழர்கள் நேருதாஸ், நிர்மல்குமார் உடன் சென்றனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 04th July 2019

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN